# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவ முதலாவது சர்வதேச மாநாடும், சித்தமருத்துவக் கண்காட்சியும் மாநாட்டுக்கு முன்னான பயிற்சி பட்டறையும்

## மாசி 23-27 ஆம் திகதி

சித்த மருத்துவமானது சிவசம்பிரதாயத்தில் இருந்து உருவாக்கப்பட்டது. இது எமது பாரம்பரியத்தின் தொன்மையான தமிழர் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ மரபாக நிலை பெற்றுள்ளது. இலங்கையில் சித்த மருத்துவமானது முதலில் சுதேச வைத்தியக் கல்லூரியின் கீழ் ஆயுள் வேத, யுனானி பிரிவுகளுடன் சேர்ந்து அரச நிறுவனமாக 1929 ஆம் ஆண்டு கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது. இக் கல்லூரியானது 1977 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்நாட்டு மருத்துவ நிறுவனமாக தரமுயர்த்தப்பட்டது. பின்னர் 1983 ஆம் ஆண்டு ஜூலையில் ஏற்பட்ட துரதிஷ்டவசமான சம்பவத்தால் சித்த மருத்துவ பிரிவானது 1984 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தினால் உள்வாங்கப்பட்டு கைதடியில் இயங்க ஆரம்பித்தது. இம் மருத்துவம் யாழ்ப்பாண மக்களின் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்கின்றமையால் காலத்தின் தேவைக்கேற்ப இவ்விடமாற்றம் அமைந்ததாக கல்வியாளர்கள் கருதினார்கள்.

சித்தமருத்துவமானது தனது 89 ஆண்டுகால வரலாற்றில்முதன் முறையாக 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை தனித்து முதலாவது சித்த மருத்துவ சர்வதேச மாநாட்டையும், கண்காட்சியையும் நடத்ததிட்டமிட்டுசெயற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் மாநாட்டுக்கு முன்னான பயிற்சிப்பட்டறையையும் கைதடியில் நடத்த உள்ளமை வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும்.

அத்துடன் இந்நிகழ்வானது இந்தியாவில் புதுடில்லியில் அமைந்துள்ள AYUSH அமைச்சுடனும் இலங்கையின் வடமாகாண சபையின் சுதேச மருத்துவ துறையுடனும், கைதடி போதனா சித்தவைத்தியசாலையுடனும் இணைந்து நிகழ்த்துவது குறிப்பிடத்தக்கதொரு வரலாற்றுப்பதிவாகும். இங்கு விரைவில் எமது சித்த மருத்துவப் பிரிவானது சித்தமருத்துவ நிறுவனமாக தரமுயர்த்தப்பட உள்ள வேளையில் இம் மாநாடு நடைபெற உள்ளது சாலப் பொருத்தமாகும். இம்மாநாட்டில் எமது நாட்டிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் மற்றும் மேலைத்தேய நாடுகளிலும் உள்ள சித்த மருத்துவம் சார் சமூகத்தினர் பங்கேற்க உள்ளமை பொருத்தமானதும் எமது மருத்துவத்தை உலகெங்கும் கொண்டு செல்லும் நோக்கத்திற்கு வலுச்சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

இச் சித்த மருத்துவ மாநாட்டின் கருப்பொருள் இயற்கையினூடாக உடல், உள, ஆரோக்கியம் என்பதாகும். இதன் கீழ் பதினொரு ஆய்வுப் புல உபதலைப்புக்களில் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன. இதில் முதலாவதாக கையேடுகள், பரம்பரை மருத்துவம் தொடர்பான விடயங்கள் இடம்பெறும். இதன் மூலம் எமது புராதன மருத்துவ முறைகளையும், பரம்பரை பரம்பரையாக கையாளப்படும் பாரம்பரிய முறைகளையும் மீள் ஆய்வு செய்வதன் ஊடாக தரமான நோய் பற்றிய விபரங்கள், ரோக நிர்ணய முறைகள், மருந்துகள், மருந்தியல், சிகிச்சை முறைகளை வெளிக் கொணர்வதற்கு ஏற்றதோர் தளமாக அமையும்என்பதில்ஐயமில்லை. இதனூடாக எமது பாரம்பரிய மருத்துவர்களின் திறனும் வெளிக்கொணரப்படும்.

அடுத்து சித்தமருத்துவமும் சோதிடமும் எனும் தலைப்பின் கீழ் எமது மருத்துவத்திற்கும் சோதிடத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றி விளக்கப்படுவதுடன் குறிப்பாக நோய்களுக்கும் சோதிடத்திற்கும் இடையிலான தொடர்பும், சோதிட முறைப்படி மருந்துச்சாலை அமைத்தலின் முக்கியத்துவம், மருந்துண்ணல் போன்ற பல விடயங்கள் ஆராயப்படும்.

மேலும் மருத்துவ மூலிகைகள் தொடர்பாக, மூலிகைகள் இனங்காணல், பரம்பல் சித்தமருத்துவ முறையில் அதன் சுவை, தன்மை, பிரிவுக்கேற்பவும் செய்கைகளுக்கு ஏற்பவும் மூலிகைகளை பயன்படுத்துதல், அத்துடன் மூலிகைகளில் உள்ள இரசாயன பதார்த்தங்களை அறிந்து கொள்வதும், மேலும் இம் மூலிகைகள் நுண்ணங்கி தாக்கத்திற்கு எதிராக எவ்வாறு செயற்படுகின்றது என்பதனை அறிந்து கொள்வதன் மூலமாக மீள் ஆய்வினை மேற்கொண்டு அதனை உறுதிப்படுத்த இம் மாநாடு பெரிதும் உதவும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை எனலாம். இது தொடர்பான பல ஆய்வுகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருவதை நாம் கண்கூடாக காணலாம்.

அடுத்து சித்தமருந்துகளின் தரநிர்ணயமும், தர உறுதிப்படுத்தலும் எனும் உபதலைப்பின் கீழ் தரமான சித்தமருந்துகளின் தயாரிப்புக் களை ஊக்குவிப்பதற்கும், மருந்துகளை தரப்படுத்த பௌதீக இரசாயன முறைகளை அறிவதற்கும், மருந்துப்பொருட்களின் தரநிர்ணயத்தை உறுதிப்படுத்தவும் உள்ள வழிமுறைகள் பற்றி ஆராயப்படுவதினால் அவை வைத்தியர்களினால் சிறந்த மருந்துப் பாவனையை தரமான முறையில் மேற்கொள்ள வழிசமைக்கும்.

மேலும் நோய்களின் பரம்பலை புவியியல் தன்மைக் கேற்ப ஐவகை நிலங்களின் அடிப்படையில் ஆராய்ந்து வெளிப்படுத்தவும் இம் மாநாடு துணை புரியும் என்பதுடன் இதனடிப்படையில் நோயாளர்களில் ஆய்வுகளை நோய்நிர்ணயம், சிகிச்சை செய்து ஒப்பீடு செய்யும் ஆய்வுகளின் முடிவுகளையும் வெளிப்படுத்த உதவும்.

மற்றும் புராதன மருத்துவ முறைகள் தொடர்பான இலக்கிய மீள் ஆய்வு எமது பழைமையான முறைகளை வெளிக்கொணர உதவும். அத்துடன் புராதன தற்கால உணவு முறைகள் தொடர்பான ஆய்வு உபதலைப்பின் கீழ் உணவுகளின் போசணைப் பெறுமானங்கள் மற்றும் இரசாயன ஆய்வுகள் மூலமும், சித்தமருத்துவ அடிப்படையில் கூறியுள்ள உணவுப் பயன்பாட்டை உறுதிப்படுத்தவும் உதவும். இன்றைய நாகரீக உலகில் தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரித்து வருவதை பார்க்கக் கூடியதாகவுள்ளது. இந்நிலையில் எமது சித்தமருத்துவம் கூறும் உணவுப்பழக்க வழக்கங்களை மீள் ஆய்வு செய்வதனால் நோய் வருமுன் காப்பதற்கும் நோய் வராமல் தடுப்பதற்கும், நோய் ஏற்பட்டபின் அதன் தீவிரத்தன்மை அதிகரிக்காமலும் இருப்பதற்கு எவ்வாறு பயன்படுத் தலாம் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

அத்துடன் தற்காலஉணவுமுறைகள், இயந்திர மயமான வாழ்க்கைக்கு ஏற்ப அதிகரித்து வருவதனால் அதனால் ஏற்படும் பக்கவிளைவையும் அறிந்து அதன் பாவனையை குறைப்பதற்கும் உதவும்

அடுத்து தற்காலத்தில் மேலைத்தேய கீழைத்தேய நாடுகளில் எல்லோராலும் விரும்பி மேற்கொள்ளப்படும் யோகா சிகிச்சைமூலம் நோய் வராமல் தடுப்பதற்கும், நோய்களை குணப்படுத்துவதற்கும் ஆன முறைகளை வெளிக்கொணர்வதற்கு ஏற்ப யோகா சிகிச்சை எனும் உபதலைப்பின் கீழ் ஆராயப்படும். இது இன்றைய சூழலில் மிகவும் இன்றியமையாதது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அதேபோல் தற்போது மிகவும் பிரபலம் பெற்று வரும் புறச்சிகிச்சை முறையினுள் தொக்கணம், வர்மம் மற்றும் நசியம், அட்டைவிடல் போன்ற பலமுறைகள் பற்றிய ஆய்வு முடிவுகள் புறசிகிச்சை முறைகளும் வர்மமும் எனும் உபதலைப்பின் கீழ் வெளிக்கொணரப்படும். இதில் தொக்கண சிகிச்சை முறையானது ஆரோக்கியத்தை பேணுவதற்கும், நோய் வராமல் தடுப்பதற்கும், நோயை குணப்படுத்துவதற்கும் பயன்படுத்துவது நம் அனைவருக்கும் அறிந்த விடயமே.

அத்துடன் நோய் நிர்ணயத்திற்கு பயன்படும் நோயாளி பரீட்சை முறைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இது எமது மருத்துவ முறைகளை நாம் நம்பிக்கையுடன் மேற்கொண்டு நோயை நிர்ணயிக்க உதவும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

எமது மருத்துவத்தில் உடல்நோய்க்கு மட்டுமன்றி உள நோய்க்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளதுடன் அவை வராமல் தடுப்பதற்கும் வருமுன் காப்பதற்கும் நோய்க்குரிய சிகிச்சை முறைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இவை பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இம் மாநாட்டில் ஆய்வுகள் தமிழ் ஆங்கில மொழிகளில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. எமது மருத்துவ நூல்கள் தமிழ் மொழியில் பெரும்பாலும் செய்யுள் வடிவில் உள்ளமையால் அதனை விளக்குவதற்கு தமிழ் மொழியே சிறந்தது. எனவே எமது மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ள மொழி தடையாக அமையாது என்பதும் தமிழ் மொழியின் ஆய்வுகள் வெளிவருவது பொருத்தமானதாகவும் அமையும்.

இவை தவிர எமது சித்த மருத்துவக் கண்காட்சியானது மாசிமாதம் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையும், மாநாட்டுக்கு முன்னான பயிற்சிப் பட்டறை மாசி மாதம் 23, 24,25ஆம் திகதிகளில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உள்ள சித்த மருத்துவ வல்லுனர்கள் மற்றும் இலங்கையில் உள்ள வல்லுனர்கள் வளவாளர்களாக பங்குபற்றவுள்ளதுடன் இப்பயிற்சிப் பட்டறையானது இரு மொழிகளிலேயே (தமிழ், ஆங்கிலம்) நடத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் முக்கியமாக வர்மம், என்பு பொருத்துதல், திருமூலர் பிரணாயாமம் , யோகா பற்றியும், புற சிகிச்சை முறைகளில் சுட்டிகை, கொம்பு கட்டல், அட்டை விடல், கட்டு, பற்று, வர்த்தி (காரநூல்) பொடி நிமிர்த்தல் மற்றும் கலிக்கம் , நசியம், வேது, பீச்சு உள்ளிட்ட சிகிச்சை முறைகள் பற்றியும் விளக்கமளிக்கப்படும். வளவாளர்களின் பெயர் விபரங்கள் விரைவில் எமது இணையத்தளம் ஊடாக அறிவிக்கப்படும். இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு பணம் கட்டுதல் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ள முடியும்.

மேலும் மாநாட்டு நிகழ்வானது மாசி மாதம் 26, 27 ஆம் திகதிகளில் நடைபெறும். இதில் மாநாட்டுக்கு முன்னான பயிற்சிப் பட்டறையும் மாநாடும் சித்த மருத்துவப் பிரிவிலும் கண்காட்சி சித்த மருத்துவப் பிரிவு சித்த போதனா வைத்தியசாலையிலும் நடைபெறும்.

இன்றைய விஞ்ஞான மயமான உலகில் எமது மருத்துவம் மக்களிடையே பிரபலமடைந்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இது சித்த மருத்துவத்திற்கு கிடைத்த ஓர் அங்கீகாரம் ஆகும். இம் மாநாட்டு நிகழ்வுகளின் மூலம் சித்த மருத்துவம் சார் சமூகத்தினரும் பொதுமக்களும் மாணவர்களும் பயனடைவார்கள் என்பதுடன் இதனால் அவர்களின் பழக்க வழக்கங்கள் உணவு முறைகள் என்பவற்றில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்படும் எனவும் நம்புகின்றோம்.

இந்தக் கட்டுரையானது இரண்டாவது கட்டுரையாக எமது மாநாடு பற்றி வெளிவருகின்றது. தொடர்ச்சியாக எமது மாநாடு பற்றிய கட்டுரைகள் அவ்வப்போது வெளிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராக செயற்படும் நான் இச்சந்தர்ப்பத்தில் எமக்கு சகல வழிகளிலும் ஆலோசனைகள் வழங்குவதுடன் இந்நிகழ்வு சிறப்புற நடைபெற ஒத்துழைப்புக்களை செய்து வரும் எமது பல்கலைக்கழக துணைவேந்தர் இந்தியத் துணைத்தூதுவர் மற்றும் இம்மாநாட்டை சிறப்புற நடத்துவதற்கு நெறிப்படுத்திக்கொண்டிருக்கும் பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டாக்டர் (திருமதி)
கலைச்செல்வி
சௌவுந்தரராஜன்
M/D. (Siddha) India
சிரேஷ்ட விரிவுரையாளர்
மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்
சித்த மருத்துவப் பிரிவு
யாழ். பல்கலைக்கழகம்